# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2025 FEBRUARY No. 02


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### நீதிமொழிகள் 21:22-31

22. பலவான்களுடைய பட்டணத்தின் மதிலை ஞானமுள்ளவன் ஏறிப்பிடித்து, அவர்கள் நம்பின அரணை இடித்துப் போடுவான்.
23. தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக் கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்.
24. அகங்காரமும் இடும்புமுள்ளவனுக்குப் பரியாசக்காரனென்று பெயர், அவன் அகந்தையான சினத்தோடே நடக்கிறான்.
25. சோம்பேறியின் கைகள் வேலை செய்யச் சம்மதியாததினால், அவன் ஆசை அவனைக் கொல்லும்.
26. அவன் நாள்தோறும் ஆவலுடன் இச்சிக்கிறான்; நீதிமானோ பிசினித்தனமில்லாமல் கொடுப்பான்.
27. துன்மார்க்கருடைய பலி அருவருப்பானது; அதைத் துர்ச்சிந்தையோடே செலுத்தினாலோ எத்தனை அதிகமாய் அருவருக்கப்படும்.
28. பொய்ச்சாட்சிக்காரன் கெட்டுப் போவான்; செவிகொடுக்கிறவனோ எப்பொழுதும் பேசத்தக்கவனாவான்.
29. துன்மார்க்கன் தன் முகத்தைக் கடினப்படுத்துகிறான்; செம்மையானவனோ தன் வழியை நேர்ப் படுத்துகிறான்.
30. கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை.
31. குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.

# ஓடுங்கள்! வெற்றி நிச்சயம்!!

*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*



1986 சியோல் ஆசிய விளையாட்டுப் போட்டியில் 800 மீட்டர் இறுதிப் போட்டி நடைபெறவிருந்தது (ஒருவேளை அப்போது நீங்கள் பிறக்காமல் இருந்திருக்கலாம்). இந்தியாவின் தலைசிறந்த விளையாட்டு வீராங்கனைகளில் ஒருவரான ஷைனி ஆபிரகாமின் பரபரப்பான வெற்றியை ஆவலுடன் எதிர்பார்த்து ஒட்டுமொத்த தேசமும் இருக்கையின் நுனியில் அமர்ந்திருந்தது. அவர் தங்கப் பதக்கம் வெல்வார் என மக்கள் நம்பியதால் எதிர்பார்ப்பு எகிறியது.

ஷைனி முதலில் பந்தயக் கோட்டைத் தாண்டியபோது ஒவ்வொரு இந்தியனும் அடைந்த பெருமிதமும், மகிழ்ச்சியும் விவரிக்க முடியாதவையுமாக இருந்தது. நாடு முழுவதும் உள்ள வீடுகளில் இருந்து மகிழ்ச்சி ஆரவாரம் எதிரொலித்தது; இருப்பினும் இந்த மகிழ்ச்சி குறுகிய நேரந்தான் நீடித்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு, விரைவில் ஓடுபாதையை மாற்றியதற்காக ஷைனி தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தேசத்தின் ஒட்டுமொத்த மகிழ்ச்சியும் மனவேதனையாக மாறியது. ஷைனியின் கடின உழைப்பும், உறுதியும் இடைவிடாத முயற்சியும் அவர் தகுதியான வெற்றியைப் பெற போதுமானதாக இல்லை. ஷைனிக்கு மட்டுமல்ல, அவரைப் புகழ்ந்து, நம்பின ஒவ்வொரு இந்தியருக்கும் இது ஒரு பேரிடியாகும். இன்றும் அந்த தருணத்தை நினைக்கும் போதெல்லாம் நான் மிகவும் மதிக்கும் மற்றும் போற்றும் அந்த விளையாட்டு வீராங்கனை ஷைனிக்காக என் இதயம் வலிக்கிறது.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!

கிறிஸ்தவ யூடியூப் சானல்!



போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

# உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





*நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப் பண்ணுவேன் ... – எபிரெயர் 6:14*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

விலையேறப்பெற்ற நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

புதிய (2025) ஆண்டுக்குள் நுழையும் நாம் தேவனுடைய அபரிமிதமான கிருபையையும், உண்மையையும் எண்ணி அவருக்கு மகிமை செலுத்துவோமாக! அவருடைய பரிசுத்த நாமத்துக்கே மகிமையுண்டாவதாக!

நீங்கள் நலமா? நீங்கள் நல்ல உடல் நலத்தோடும், உறுதியான விசுவாசத்தோடும் இருப்பீர்களாக. கர்த்தர் நம் மீது பொழிந்தருளின எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் நாம் அவருக்கு நன்றியறிதலுள்ளவர்களாகக் வாழ வேண்டும். இன்றும் நான் உங்களுடைய ஆத்தும, சரீர, உணர்வுபூர்வ நலனுக்காக ஜெபித்தேன்.

அண்மையில் எனக்குள் ஆழமாக எதிரொலித்த தியானம் ஒன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஏவப்படுகிறேன்.

## கடிந்து கொள்ளுதல் தண்டனையல்ல!

அடிக்கடி, நம்மை அறியாமலே நாம் தேவனளிக்கும் விடுதலையை அனுபவித்து வருகிறோம். அது நமக்கு மனநிறைவையளிக்கலாம்.; பெருமை நம் இருதயத்திற்குள் நுழைந்து, தேவன் பேரிலுள்ள நமது நம்பிக்கையை மங்கிப்போகச் செய்து, நன்றியறிதலைக் குறைத்துவிட முடியும்; நம்மை திருத்தவும், வழிநடத்தவும் தேவன் நம்மைக் கடிந்து கொள்ளலாம்.

கடிந்து கொள்ளுதல் மாற்றத்தைக் கொண்டுவராதபோது, நம்மைத் தாழ்மைப்படுத்தி அவரிடம் கிட்டிச் சேர்த்துக்கொள்ள துன்பவேளையை தேவன் அனுமதிக்கலாம். இவ்விதமான துன்பங்களைத் தண்டனை என்று கூறாமல், நாம் வழிவிலகிச் செல்லாமலிருக்க தேவனது அன்பின் சிட்சை என்று தாவீது எழுதியுள்ளார் (சங்கீதம் 119:75)

அன்பிலும், உண்மையிலும் வேர் கொண்டதுதான் தேவனது குணாதிசயமாகும். உண்மைத்தன்மை என்பது உறுதியையும், மாறாத அசையாத தன்மையையும் அடிப்படையாகக் கொண்டது. சாதாரண மனிதர்களைப்போல் விரோத மனப்பான்மையுடன் தேவன் மனிதர்களை பழிவாங்க நினைப்பதில்லை. மாறாக, அவர் தமது அன்பில் நிலையாக இருக்கிறார். துன்பங்கள் கீழ்ப்படியாமையின் தண்டனை என்றுத் தவறாய்ப் புரிந்து கொள்ளக் கூடாது. தேவனை விட்டு விலகிச் செல்வோருக்காகத் தண்டனை வைக்கப்பட்டிருக்கிறது. அதேவேளை சிட்சை என்பது ஒரு கணப்பொழுதில் வழிதவறிய தேவ பிள்ளைகளுக்கான தேவனுடைய அன்பின் செயலாகும்.

தேவன் தமது பிள்ளைகளைச் சிட்சிப்பது (சோதிப்பது) அவர்கள் வளர்ந்து செழிக்க வேண்டும் என்னும் ஆழ்ந்த விருப்பத்தினாலேயாகும், கோபத்தினால் அல்ல. இதைச் சரியாகப் புரிந்துகொண்டால் நாம் நன்றியுள்ள இருதயத்தோடும், சரியான மனப்பான்மையோடும் சிட்சையை ஏற்றுக்கொள்ள உதவுகிறது. மிகச் சரியான கண்ணோட்டத்துடன் துன்பத்தை ஏற்றுக் கொண்ட ஒருவர் யோசேப்பு ஆவார். (ஆதியாகமம் 50:15–21)

**கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும், உண்மையின்படி என்னை உத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன்.** சங்கீதம் 119:75.

தேவன் தாமே உங்களை அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**

(+91) 98410 71858 / 98412 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

HON. MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM., MBA.

ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858

E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

YOUTUBE CHANNEL
Echo of His Call

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) • BIBLECOR - Postal Courses (3 languages) • YouTube Ministry • Online Courses • Theological Correspondence Courses (2 languages) • Church Planting • Nehemiah Bible Colleges • Gospel Printing Press • Great Commission Partners • St. Paul's Matriculation School • Crusades • Community Development

## உங்கள் கவனத்திற்கு!

*நமது அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் Echo of His Call YouTube சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட (Personal) இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1-ம் பக்கத் தொடர்ச்சி



## வெற்றிபெற ஓடுங்கள்!

வாழ்க்கை என்பது ஒரு பந்தயம். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவமான பாதையை வடிவமைத்துள்ளார். சிலர் குறுகிய தொலைவு ஓட்டக்காரர்கள், மற்றவர்கள் நீண்ட தொலைவு ஓட்டப்பந்தய வீரர்கள்; சிலர் தடகள ஓட்ட விளையாட்டு வீரர்களாகவும் இருக்கலாம். ஒவ்வொருவருக்கும் தனித் தனி திறமைகளும், உத்திகளும் தேவை. தேவன் தமது திட்டத்தின்படி ஒவ்வொரு பயணத்தையும் அமைத்துள்ளதால் நாம் மற்றவருடைய ஓட்டத்தை ஓட முடியாது.

ஒவ்வொரு வகை ஓட்டமும் வெவ்வேறு நிலைகளில் சகிப்புத் தன்மை, திட்டமிடுதல் மற்றும் வலிமையைக் கோருகிறது. ஒரு ஸ்ப்ரிண்டர் எளிதாக நீண்ட தூர ஓட்டத்திற்கு மாற முடியாது; அதற்கு அபரிமிதமான முயற்சியும், ஆயத்தமும் இல்லாமல் ஒரு மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் சிறப்பாகச் செயல்பட முடியாது. அதுபோலவே தேவன் நமக்கு முன் வைத்த ஓட்டத்தில் ஓடுவதற்கான கிருபையையும், திறமையையும் நமக்குத் தருகிறார்.

விடாமுயற்சியுடன் நமது ஓட்டத்தை ஓடுவோம். மற்றவர்களின் ஓட்டத்தில் கவனம் செலுத்தாமல் தேவன் நமக்காக தனித்துவமாக வடிவமைத்த நோக்கத்தின் மீது கவனம் செலுத்துவோம்.

நாம் வேறு வகையான ஓட்டத்தை நடத்தத் தேர்வு செய்தால் அது பிரபலமாக இருந்தாலும், நவநாகரீகமாக இருந்தாலும் அல்லது பாதுகாப்பான சூத்திரமாகத் தோன்றினாலும் – நமது நோக்கத்தின் சாராம்சத்தை இழந்து விடுவோம். அவ்வாறு செய்வதன் மூலம் தேவன் நமக்கு நியமித்த உண்மையான ஓட்டத்தில் நாம் வெற்றிபெற முடியாது. வாக்களித்த பரிசை வெல்வதே நமது இறுதி இலக்கு.

நமக்கு நிர்ணயிக்கப்பட்ட பாதையில் இருந்து விலகி, வேறொருவரின் பாதையில் ஓடினால், முதலில் ஓடி முடித்தாலும் நாம் தோல்வியடைவோம். வெற்றி நம்முடையதாக இருக்காது. அதனால்தான், **பந்தய சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள். ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். 1 கொரிந்தியர் 9:24 என்று வேதம் நமக்குக்** கற்பிக்கிறது.

## நாம் எவ்வாறு ஓட வேண்டும்?



### 1. உண்மையாக ஓட வேண்டும்!

**நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.** 2 தீமோத்தேயு 4:7.

பரிசை வெல்ல, நாம் உண்மையாக ஓட வேண்டும். நமது வேலை, திருமணம், நிதி, உறவுகள் அல்லது ஆவிக்குரியப் பயணம் போன்ற நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் விசுவாசம் அவசியம்.

தேவன் நம்மை ஓட அழைத்திருக்கும் ஓட்டம் ஒரு எளிய ஸ்பிரிண்ட் அல்ல; அது ஒரு போராட்டம். பவுல் சொல்வது போல், “நான் நல்ல போராட்டத்தை போராடினேன்.” ஒவ்வொரு நாளும், இந்த உலகத்தின் அதிபதிக்கு எதிராக நாம் ஆவிக்குரியப் போரில் ஈடுபடுகிறோம்; அவன் நம் வாழ்வுக்கான தேவனுடைய நோக்கத்தை முறியடிக்கத் தீர்மானிக்கிறான். **திருடுவது, கொலை செய்வது மற்றும் அழிப்பது என அவனது பணி தெளிவாக உள்ளது** (யோவான் 10:10). நாம் நம்முடைய சிருஷ்டிகருக்கு உண்மையாக இருக்கிறோமா என்பதை அவன் ஏதேன் தோட்டம் முதலே சோதித்து வருகிறான்.

சர்ப்பம் தேவனது நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியது. அதன் மூலம் ஏவாளின் மனதில் சந்தேகத்தை விதைத்தது. இந்த செயல் தேவன் மீதும் மற்றும் அவரது கட்டளையின் மீதும் அவளது நம்பிக்கையைக் குறைத்து மதிப்பிட வைத்தது. இறுதியில் அவளுடைய நம்பிக்கையையே அழித்தது.

**அப்பொழுது சர்ப்பம் ஸ்தீரியை நோக்கி: நீங்கள் சாகவே, சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது** ஆதியாகமம் 3:4–5 –ல் எழுதப்பட்டுள்ளபடி, இந்த வஞ்சகத்தின் மூலம் சர்ப்பம் ஆதாமும், ஏவாளும் தங்கள் சிருஷ்டிகருடன் பகிர்ந்து கொண்ட அழகான உறவைத் திருடி அழித்துக் கொன்றது.

தேவன் உண்மையுள்ளவர் என்பதால் நம்மை உண்மையாக இருக்கும்படி அழைக்கிறார்.

**அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே** என்று எபிரெயர் 10:23 நமக்கு நினைவூட்டுகிறது

தேவன் நமக்கு ஒரு வாக்குத்தத்தத்தை அளிக்கும்போது, அதை நிறைவேற்றுகிறார். பல வருடங்களாக உங்கள் பிரார்த்தனைகளுக்கு பதில் கிடைக்காமல் இருப்பதுபோல் உணர்ந்தாலும்,

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |

அவர் உங்களை மறக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். **தேவன் நம் ஒவ்வொருவரின் கண்ணீரையும் சேகரித்து தம் துருத்தியில் வைத்திருக்கிறார்** (சங்கீதம் 56:8) என்று நமக்கு உறுதியளிக்கிறது. அவர் எப்பொழுதும் தம் மக்களுக்கு உண்மையுள்ளவர். அவருடைய சரியான நேரத்தில் பதிலளிப்பார்.

ஆகையால் அவருடைய கிரியைகளுக்கான ஆதாரங்களை நீங்கள் காண முடியாவிட்டாலும், உங்கள் பந்தயத்தில் ஓடிக்கொண்டே இருங்கள். உண்மையுள்ள நமது தேவனுக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருப்பதற்கு உறுதியான விசுவாசம் தேவை.

**“நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப் படுவீர்கள், ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்”** என்று வெளிப்படுத்துதல் 2:10 –ல் தேவன் ஏற்கனவே நம்மை எச்சரித்துள்ளார்.

நாம் ஓடிக்கொண்டிருக்கும் ஓட்டம் எளிதான ஒன்றல்ல – இது ஒரு தடகள ஓட்டத்தை ஒத்திருக்கிறது. தண்ணீர் தாவல்கள், திறந்தவெளி பள்ளங்கள் மற்றும் வேலிகள் போன்ற பல்வேறு தடைகள் நிறைந்தது. ஆனாலும் விசுவாசத்தில் உறுதியாய் ஓடிக்கொண்டே இருக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

உடல்ரீதியாகவோ, உணர்ச்சி ரீதியாகவோ, ஆவிக்குரிய ரீதியாகவோ அல்லது நிதி ரீதியாகவோ – இன்னல்கள் மற்றும் சவால்கள் இருந்தபோதிலும் நம் நம்பிக்கையைப் பற்றிக் கொண்டால் வெற்றியாளரின் கிரீடத்தைப் பெறுவோம். ஓட்டத்தை பாதியில் நிறுத்தவோ அல்லது பின்வாங்கவோ நம்மால் முடியாது. மாறாக நாம் நம் இருதயங்களில் நேர்மையுடனும், ஆத்துமாவில் நம்பிக்கையுடனும் நிலைத்திருக்க வேண்டும்.

நம்முடைய தற்போதைய சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், நம் அழைப்பில் உண்மையாக இருப்பது அவசியம். தேவன் நம்மிடம் ஒப்படைத்திருப்பது – ஒரு பெரிய பொறுப்பாக இருந்தாலும் அல்லது சிறியதாக இருந்தாலும் – நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒரு சிறிய நிறுவனத்தில் ஒரு சாதாரண நிலையில் இருந்தாலும், உண்மையாக இருங்கள். ஒருவரும் பார்க்காதபோது உண்மையாக இருங்கள். ஏனென்றால் தேவன் எல்லாவற்றையும் பார்க்கிறார்.

**தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்** என்று நீதிமொழிகள் 22:29–ல் எழுதியுள்ளபடி கருத்தாய் பணியாற்றுங்கள்.

உங்கள் பணியிடத்தில் நீங்கள் பாராட்டப்படாமல் இருக்கலாம்– உண்மையாக இருங்கள். உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் மத்தியில் நீங்கள் அங்கீகரிக்கப்படாமல் போகலாம் – உண்மையாக இருங்கள். உங்கள் சபையாரின் பார்வையில் நீங்கள் முக்கியமற்றவராக உணரலாம் – உண்மையாக இருங்கள். இறுதியான வெகுமதி அளிப்பவரான தேவன் உங்கள் உழைப்பை இரகசியமாகப் பார்க்கிறார். தம்முடைய ஏற்ற நேரத்தில் வெளிப்படையாக உங்களுக்கு வெகுமதி அளிப்பார்.

... **“நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி”** ... மத்தேயு 25:23 என்று கர்த்தர் சொல்லும் நாள் ஒன்று வரும்.

நாம் எதிர்கொள்ளும் சவால்களைப் பொருட்படுத்தாமல் சமரசம் செய்யாமல், விசுவாசமாகவும், அசையாமலும் – நம்பிக்கையில் உறுதியாக நிலை நிற்பதற்கு தேவன் நமக்கு கிருபையளிக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். கிறிஸ்துவின் உண்மையான தூதுவர்களாக இருக்க முயற்சி செய்வோம்.

## 2. பொறுமையாக ஓட வேண்டும்!

... **நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;** எபிரெயர் 12:1.

எந்தவொரு விளையாட்டு வீரருக்கும் விடாமுயற்சி அல்லது சகிப்புத்தன்மை ஒரு முக்கியமான குணம் ஆகும். பயணம் கடினமாகிவிட்டால், விட்டுக் கொடுக்க இடமில்லை. வெற்றிக்கு அர்ப்பணிப்பு, ஒழுக்கம் மற்றும் ஆறுதலுக்கு அப்பால் தன்னைத் தள்ளும் விருப்பம் தேவை. அது கடின உழைப்பு, போராட்டம், வியர்வை, வேதனை மற்றும் ஏமாற்றத்தின் தருணங்கள் போன்றவை அவசியமாகிறது.

அதேபோல் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை எளிதான பாதை அல்ல. நாம் போராட்டங்களையும் யுத்தங்களையும் எதிர்கொள்கிறோம், நமது நம்பிக்கையை சோதிக்கும் சவால்களை சகித்துக் கொள்கிறோம். சில சமயங்களில் மற்றவர்கள் புரிந்து கொள்ளாத பாதையில் நாம் நடப்பது போல் தனிமையாக உணரலாம். உலகத்தின் மதிப்புகளுடன் சமரசம் செய்யவோ அல்லது ஒத்துப் போகவோ முடியாதது நம்மை வித்தியாசமான மக்களாக உணரச் செய்யும்.

இந்த உணர்வுகள் இயற்கையானவை. ஆனால், இந்த பாதை குறுகியதும் மற்றும் சவாலானதாகவும் இருந்தாலும், நித்திய மகிழ்ச்சிக்கும் நிறைவிற்கும் வழிவகுக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு அடியிலும் தேவன் நம்முடன் இருக்கிறார் என்பதை அறிந்து அசைக்க முடியாத உறுதியுடன் முன்னேறுவோம்.

பெரிய தேவமனிதர்கள் இதே போன்ற உணர்வுகளை அனுபவித்தனர். ...

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
Diploma in Theology
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
உடனே அணுகவும் !
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

GREAT COMMISSION PARTNERS
ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2025 பிப்ரவரி 19 முதல் மார்ச் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

பிப்ரவரி 19 ⇨ **அழைப்பின் எதிரொலி யூடியூப் சேனல்** மற்றும் **ஊடக ஊழியம்** மூலமாக சந்திக்காத பன்மொழி மக்களை சந்திக்க வைத்த கிருபைக்காக ...

பிப்ரவரி 20 ⇨ நமது சபை ஊழியப்பணிகள் மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட கிருபைக்காக...

பிப்ரவரி 21 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மற்றும் **நெகேமியா வேதாகமக்கல்லூரிகளில்** பயின்று வரும் மாணவர்களுக்கு தேவபாதுகாப்பு கொடுத்து வருவதற்காக...

பிப்ரவரி 22 ⇨ நமது பங்காளர்களின் உறுதுணை மற்றும் பொருளாதார ஆதரவிற்காக ...

பிப்ரவரி 23 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

பிப்ரவரி 24 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

பிப்ரவரி 25 ⇨ இளம்பிராயத்தினரை உற்சாகத்தினால் நிரப்பி அனைத்து சபை நடவடிக்கைகளிலும் பங்கேற்க செய்த கிருபைக்காக ...

பிப்ரவரி 26 ⇨ நமது **அழைப்பின் எதிரொலியின்** இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

பிப்ரவரி 27 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்து வருகிறதற்காக ...

பிப்ரவரி 28 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபையின் ஞாயிறு ஆராதனைகளில் வழங்கப்படும் தேவச்செய்திகளின் வல்லமைக்காக ...

மார்ச் 01 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

மார்ச் 02 ⇨ நமது பணியாளர்கள் மீது ஆண்டவரது ஆசீர்வாதங்கள் பொழியப்பட்டதற்காக...

மார்ச் 03 ⇨ நமது தலைமைச் சபைக்கு களப்பணி ஆர்வம் உள்ள அங்கத்தினர்களைத் தந்து ஆசீர்வதித்ததற்காக ...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

மார்ச் 04 ⇨ இஸ்ரேல், பாலஸ்தீனம், ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளில் சமாதானம் பரவ ...

மார்ச் 05 ⇨ உலக நாடுகள் அனைத்திலும் ஒற்றுமையும் சமாதானமும் நிலைத்திருக்க வேண்டி ...

மார்ச் 06 ⇨ கிறிஸ்தவ போதகர்கள் கள்ள உபதேசம் செய்யாமல் வேதாகம முறைப்படி பிரசங்கிக்க ...

மார்ச் 07 ⇨ 2025–26ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

மார்ச் 08 ⇨ 2025–26ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

பிப்ரவரி 09 ⇨ உலக நாடுகளிலுள்ள பிள்ளைகள் மற்றும் இளவயதினர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டி ...

மார்ச் 10 ⇨ உலக நாடுகளிலுள்ள பிள்ளைகள் மற்றும் இளவயதினர் மொபைல் போன் மற்றும் இணையதள விளையாட்டுகளின் அடிமைத்தனத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டி ...

மார்ச் 11 ⇨ முதியோர் இல்லங்களில் உள்ள வயதானவர்களுக்காக ...

மார்ச் 12 ⇨ நமது அனைத்து பொருளாதாரத் தேவைகளும் சந்திக்கப்பட வேண்டி...

மார்ச் 13 ⇨ நமது பங்காளர்கள் மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர்களின் சுகபெல ஜீவன்களுக்காக ...

மார்ச் 14 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி...

மார்ச் 15 ⇨ புதிதான இந்த 2025ல் அபரிமிதமான ஆசீர்வாதங்கள் கிடைத்திட...

மார்ச் 16 ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் குடும்பத்தினர் அனைவரையும் சகலவிதமான தீய சக்திகளின் வல்லமைக்கு விலக்கிக் காத்திட...

மார்ச் 17 ⇨ உலகெங்குமுள்ள அனைத்துப் பெண்களும், சிறுவர் சிறுமியரும் பாதுகாப்பாக வாழ்ந்திட வேண்டி ...

மார்ச் 18 ⇨ நமது நிறுவனப் பணியாளர்கள் அனைவரின் சுகபெல ஜீவன்களுக்காக ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

“**நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்**” ... 1 இராஜாக்கள் 19:10 என்று எலியா புலம்பினார்.

தாவீது அடிக்கடி தனிமையின் கனத்தை உணர்ந்தார். மோசேயும் அத்தகைய தருணங்களைத் தாங்கினார். இது போன்ற உணர்வுகள் நமக்கு புதிதல்ல. எனினும் நம் ஓட்டத்தில் விடாமுயற்சியுடன் இருக்க நமக்கு அதிகாரம் அளிப்பது நமக்கு முன் சென்றவர்களின் சாட்சியாகும் (எபிரெயர் 12:1). நமது ஓட்டத்தைக் கைவிட முடியாது என்பதை அவர்களுடைய சாட்சிகள் நமக்கு நினைவூட்டுகின்றன.

பயணம் சோர்வாக இருந்தாலும் நாம் தொடர்ந்து செல்ல வேண்டும். கர்த்தரின் உதவி நமக்கு எப்போதும் உண்டு. நம்மில் சிலர், சோர்வடையும் வார்த்தைகள், தவறான குற்றச்சாட்டுகள், தவறான புரிதல்கள் அல்லது மனதின் விரக்தி உணர்வை எதிர்கொண்டு, “நான் ஏன் தொடர வேண்டும் ஆண்டவரே?” என்று நினைத்தாலும், விடாமுயற்சியுடன் செயல்பட நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

தனிமையை எவரும் விரும்புவதில்லை. நாம் அனைவருடனும் சேர்ந்து இருக்கவே விரும்புகிறோம். ஆனாலும் நம் இருதயத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். **நாம் உலகத்துடன் நட்பைத் தேர்ந்தெடுக்கும் போது, நாம் தேவனுக்குப் பகைவர்களாக மாறுகிறோம்** (யாக்கோபு 4:4). உலக சிநேகத்துடன் தங்களை இணைத்துக் கொள்பவர்கள் விபச்சாரம் செய்பவர்களுக்கும், விபச்சாரிகளுக்கும் ஒப்பிடப்படுகிறார்கள் என்று வேதம் எச்சரிக்கிறது.

எனவே, தேவன் நமக்கு முன் வைத்த ஓட்டத்தில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். இதில் சமரசத்துக்கு இடமில்லை. உறுதியாக இருங்கள். ஏனெனில் பிரதிபலன் நித்தியமானது.



## 3. முடிக்கத்தக்கதாக ஓட வேண்டும்!

ஓடி முடிப்பது மட்டும் நமது ஓட்டத்தின் இறுதி இலக்கு அல்ல, வெற்றியுடன் முடித்து பரிசு பெறுவதுதான் ஆகும். அப்போஸ்தலர் 20:24 கூறுகிறதாவது, **ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும், நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.**

அன்பான நண்பர்களே! வாழ்க்கை நிலையற்றது. இயேசு கிறிஸ்துவுக்காக நாம் செய்வது மட்டுமே நிலைத்திருக்கும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருக்கிற நமக்கு தற்பரிசோதனைக்கான நேரம் இது. கர்த்தர் உங்களுக்கு முன் வைத்த ஓட்டத்தில் நீங்கள் ஓடுகிறீர்களா?” சரியான பாதையில் செல்கிறீர்களா? கவனச் சிதறல்கள், பின்னடைவுகள் மற்றும் சவால்கள் இருந்தபோதிலும் விடாமுயற்சியுடன் ஓடி உங்கள் அர்ப்பணிப்பைக் கொடுக்கிறீர்களா? இல்லை என்றால் இதுவே மறுபரிசீலனை செய்ய சரியான தருணம் ஆகும்.

நமது ஓட்டத்தை நம்பிக்கையோடும், சகிப்புத் தன்மையோடும், வலிமையோடும், நிறைவுசெய்யும் உறுதியோடும் ஓடுவோம். தளர்ந்து விடாதீர்கள். கர்த்தர் உண்மையுள்ளவர். அவருடைய கிருபை குறைந்துவிடும் ஒரு நிலைக்கு அவர் நம்மை ஒருபோதும் கொண்டு செல்லமாட்டார்.

நீங்கள் சுமக்கும் சுமை அதிகமாகவோ, மிகவும் கவனமாகவோ அல்லது உணர்ச்சி ரீதியில் வடிகட்டுவதாக உணர்ந்தால், கர்த்தருக்கு முன்பாக வந்து “ஆண்டவரே, நான் இந்தப் பகுதியில் போராடிக் கொண்டிருக்கிறேன். இந்த பாரத்தை என் தோள்களில் வைத்துக் கொண்டு என்னால் தொடர்ந்து ஓட முடியாது” என்று உங்கள் இருதயத்தை அவரிடம் ஊற்றுங்கள்.

எசேக்கியா ராஜாவின் உதாரணத்தைக் கவனியுங்கள். அசீரிய மன்னனின் வார்த்தைகளைக் கேட்டதும் அவன் உள்ளம் உடைந்தது. அவர் முற்றிலும் உதவியற்றவராக உணர்ந்தார். அசீரிய அரசன் அவனையும், அவனுடைய நம்பிக்கையையும் கேலி செய்து, “என்னை எதிர்த்து நிற்க உனக்கு எவ்வளவு தைரியம்?” உங்களுக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது? என் கையிலிருந்து உன்னை யார் காப்பாற்றுவார்கள்? அது முடிந்து விட்டது. யாராலும் உங்களை விடுவிக்க முடியாது. நீங்கள் விரும்பினால், நான் உங்களுக்கு 2000 குதிரைகளைக் கூடத் தருகிறேன். என்னை எதிர்த்துப் போரிட நீங்கள் அவர்களுக்கு சவாரி செய்பவர்களை கண்டுபிடியுங்கள்.

என்னே ஒரு சவால்! அந்த தருணத்தில் எசேக்கியா அரசனின் மனது மற்றும் உணர்ச்சி நிலையைக் கற்பனை செய்து பாருங்கள். ஆனாலும், விரக்தியில் எசேக்கியா கர்த்தரிடம் திரும்பினார். இதுதான் அவருடைய உண்மையான பெலன் ஆகும்.

இந்த சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

சிறைபிடிக்கப்பட்டவர்களை குறிப்பாக எதிரி நாட்டு அரசர்களைக் கொடூரமாக நடத்துவதற்கு அசீரிய மன்னர்கள் பேர் பெற்றவர்களாயிருந்தனர். இதை அறிந்த எசேக்கியா தனது எதிர்காலம் இருண்டதாக இருப்பதைப் புரிந்து கொண்டார். அவர் தனது நம்பிக்கையை இழந்து அவருக்கு முன் வைக்கப்பட்ட ஓட்டத்தை முடிக்கத் தவறியிருக்கலம். இருப்பினும் ஏசாயா 37-ம் அதிகாரம் வேறுபட்ட பதிலை வெளிப்படுத்துகிறது.

1. அவர் கர்த்தருடைய சந்நதிக்குத் திரும்பினார். எசேக்கியா ஆலயத்திற்குள் சென்று, தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினார்.
2. அவர் தனது கஷ்டங்களைக் கர்த்தரிடம் பகிர்ந்து கொண்டார். அவர் தனது இதயத்தை ஊற்றி தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலை நாடினார். தாவீதும் சங்கீதம் 119:26-ல் “**என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவி கொடுத்தீர்; உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.**” என்று எழுதியுள்ளார். மற்றொரு மொழிபெயர்ப்பில், “என் வாழ்க்கையைப் பற்றி நான் உம்மிடம் விவரித்தேன்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதேபோல், நமது பிரச்சனைகள், தோல்விகள் மற்றும் ஏமாற்றங்களைக் கர்த்தரிடம் கொண்டு வர நாம் ஊக்குவிக்கப்படுகிறோம். நாம் அதைச் செய்யும்போது, அவர் நமக்கு முன்னோக்கி செல்லும் வழியை செவ்வைப்படுத்துவார்.



## ஓட்டத்தைத் தொடர்ந்து ஓடுங்கள்!

அன்பான தேவபிள்ளைகளே! உங்கள் ஊழியத்தில் உண்மையாக இருப்பதில் நீங்கள் சோர்வடைகிறீர்களா? நீங்கள் விடாமுயற்சியுடன் போராடுகிறீர்களா? நம்பிகை இழந்து விடாதீர்கள்! இது நம்பிக்கை இழக்கும் நேரம் அல்ல. அவர் உங்களை நிற்கச் சொல்லும் வரை எழுந்து ஓடிக் கொண்டே இருங்கள்!

எத்தகைய சவால்களை எதிர்கொண்டாலும் பொறுமையுடன் ஓடுங்கள்.

## நாம் எப்படி ஓடக்கூடாது!

**வீணாக ஓடாதேயுங்கள்:** கலாத்தியர் 2:2 –இல் ... “**நான் ஓடுகிறதும் ஓடினதும் வீணாகாதபடிக்கு**” ... என்று பவுல் எழுதினார்.

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

*உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். – ஏசாயா 54:17*

பல நேரங்களில், தேவ ராஜ்ஜியத்தின் விரிவாக்கத்திற்காக ஏதாகிலும் ஒரு புதிய ஊழியத்தை நாம் ஆரம்பிக்கும் காலத்தில் பல எதிர்ப்புகளையும், கஷ்டங்களையும் நாம் சந்திக்க நேரிடும். சில நேரங்களில் பிசாசு நம்மை நேரிடையாக எதிர்க்காமல் சில மக்கள் மூலமாக எதிர்ப்பான். நான் தனிப்பட்ட மனிதனாக பல எதிர்ப்புகளையும், கஷ்டங்களையும் சந்தித்திருக்கிறேன்.

**நமது தலைமைச்சபைக் கட்டிடத்தை நாங்கள்** கட்டும்போது எங்கள் பகுதி மக்கள் அதிருப்தியுடன் காணப்பட்டார்கள். கட்டிடப் பணியின்போது எவ்வளவோ தொல்லைகள் எனக்கு அளித்தனர். அவர்கள் கட்டிடப்பணி செய்தவர்களுக்குப் பல தொந்தரவுகளைக் கொடுத்ததினால், அநேக பணியாளர்கள் தொடர்ந்து வேலை செய்யாமல் வேலையை விட்டுப் போய்விட்டனர். எனவே என்னால் தொடர்ந்து அவ்வேலையில் ஈடுபட முடியாத மிகவும் கடினமானச் சூழ்நிலையில் இருந்தேன். பயங்கரமான எதிர்ப்புகளைக் கண்டு அக்கட்டிட பொறுப்பை ஏற்றுக்கொண்டவர், தனது பணியாளர்களையும் கூட்டிக்கொண்டு அவ்விடத்திலிருந்து ஓடிவிட்டார்.

**கர்த்தருடைய வேலைக்கு எதிரான சில மக்கள் என்னிடம்** வந்து அந்த இடத்தில் செய்யப்படும் வேலையை நிறுத்தவும், கிறிஸ்தவர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிக்குச் சென்று அவ்வேலையைத் தொடரவும் எனக்கு அழுத்தம் கொடுத்தனர். ஆனால் நானோ எனது அழைப்பில் உறுதியாயிருந்து அவர்களது கருத்துகள் எதையும் கேட்க இயலாத நிலையில் உள்ளேன் என்றும், நான் செய்து வந்த ஊழியம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயப்பணி என்றும் விளக்கி கூறினேன்.

**ஆனால் அவர்களோ எனக்கு பின்னர் மன ரீதியாகவும்,** சரீர ரீதியாகவும் கஷ்டம் கொடுத்து வந்தனர். இந்த எனது சோதனையின் நேரத்தில் சென்னையிலிருந்த அநேக கிறிஸ்தவ தலைவர்களையும், கிறிஸ்தவ வக்கீல்மார்களையும் சந்தித்து எனக்கு உதவியாய் என்னோடு இருக்கும்படி கேட்டுக் கொண்டேன். ஆனால் ஒருவரும் எனக்கு உதவ முன்வரவில்லை. அப்போது நான் அதிகமாய் ஜெபத்தில் நேரம் செலவழித்து, கர்த்தரே என்னோடு இருக்கும்படிக்கு ஜெபித்து வந்தேன். நான் விசுவாசத்தில் மேலும் முன்னேற தேவ சமாதானம் எனக்குள் நிலவுவதை உணர்ந்து கொண்டேன்.

**உதாரணமாக, ஒரு நாள், கான்கிரீட் தளம்** போடுவதற்காக கான்கிரீட் கலவை செய்து வண்டிகளில் கொண்டுவரப்பட்டது. அண்டை வீடுகளிலுள்ள சில மக்கள் எனக்கெதிராய் எழும்பி சத்தமிட்டனர். நான் செய்வதறியாது கலங்கி அந்த வண்டிகளைத் திருப்பி அனுப்பிவிட நேர்ந்தது. ஆனால் அதற்கான செலவை கொடுக்க வேண்டியதாயிற்று. இருப்பினும் சில நாட்கள் கழித்து அவ்வேலையை முடிக்க கர்த்தர் எனக்கு உதவி செய்தார்.

**இறுதியாக எல்லாப் பணிகளும் முடிவடைந்ததும்** அக்கட்டிடத்தின் பிரதிஷ்டை ஆராதனைக்கு வரும்படியாக என் நண்பர்களுக்கும், இதர ஊழியர்களுக்கும் அழைப்பிதழ்களை அனுப்பினேன். மேலும் கர்த்தருடைய வேலையை தடை செய்தவர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்ப முற்பட்டபோது, அவர்களை தேடியும் காணவில்லை. கர்த்தருடைய வேலைக்கும் எனக்கும் எதிராகச் செயல்பட்டவர்களைத் தேடியும் காணாமல் போய்விட்டனர். தங்களுடைய குடும்பப் பிரச்சினைகளால் சிலர் அப்பகுதியை விட்டு காலி செய்து வேறிடம் சென்றுவிட்டனர். சிலர் தங்களுடைய சொத்துகளை விற்றுவிட்டே போய்விட்டனர். மேலும் பலர் கர்த்தருடைய வேலையை எதிர்த்து செயல்பட்டதால் பல துயர சம்பவங்கள் அவர்கள் வாழ்க்கையில் சம்பவித்ததால் காணாமல் போய்விட்டனர். அவர்களையோ அவர்கள் குடும்பத்தினரையோ நான் அதன்பின் காணமுடியாதது துயரமான காரியம்தான். அவர்களில் சிலரது கட்டிடங்கள் பல வருடங்களாக பூட்டின நிலையில் இருக்கிறது. சில கட்டிடங்கள் உடைந்த நிலையில் யாரும் வசிக்க முடியாத இடமாக மாறியுள்ளது.

**இப்பொழுது, கர்த்தருடைய வேலையை எதிர்த்து நிற்க** யாருமில்லை. நம் ஆலயம் அப்பகுதியிலேயே ஆரவாரம் நிறைந்த இடமாக உள்ளது. கர்த்தரை விடுதலையோடு மக்கள் ஆராதிக்கின்றனர். தேவ ராஜ்ஜியத்தின் விரிவாக்கத்திற்காக இரவும் பகலும் பல நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன.

**உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார். ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்** (உபாகமம் 28:7).

**உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம்பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள்** (ஏசாயா 41:12).

**அன்பு நண்பரே, நீங்கள் நற்காரியங்களைச் செய்ய** முயற்சித்தும், பல எதிர்ப்புகளையும், தொந்தரவுகளையும் உங்கள் வாழ்க்கையில் சந்திக்கிறீர்களா ? பொறுமையாயிருந்து தேவனுடைய முகத்தை நோக்கிப் பாருங்கள். இதுவரை உங்கள் வாழ்க்கையில் அனைத்தையும் இழந்திருந்தாலும், எதிர்காலம் இன்னும் மீதியாய் உங்கள் முன் இருக்கிறது.

**"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்"** (சங்கீதம் 23:1).

**...எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்றும்...** எஸ்றா 8:22.

*************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

கர்த்தர் நமக்கு முன் வைத்துள்ள ஓட்டத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நமது முயற்சிகளை வீணாக்காமல் இருக்க வேண்டும். உலகத் தரம் வாய்ந்த தடகள வீராங்கனை ஷைனி ஆபிரகாமின் பாடத்தைக் கவனியுங்கள். அவர் தனது பந்தயத்தை முதலில் முடித்திருந்தாலும், ஒரு சிறிய அப்பாவித்தனமான தவறு காரணமாக பதக்கத்தைத் தவறவிட்டார்.

சில சமயங்களில், நாம் கடின உழைப்பாளிகளாகவும், அர்ப்பணிப்பு மற்றும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்கலாம், ஆனால் பரிசை வெல்ல முடியாமல் போகலாம். ஏன்? ஏனென்றால் கர்த்தர் நம்மிடமிருந்து உண்மையிலேயே எதை விரும்புகிறார் என்பதை நாம் கவனிக்காமல் இருக்கலாம்; நாம் ஓடுவதற்காக தேவன் வடிவமைத்த குறிப்பிட்ட ஓட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம்.

2 சாமுவேல் 18-ம் அதிகாரத்தில் நாம் ஒரு கண்கவர் சம்பவத்தை எதிர்கொள்கிறோம். யோவாப், தாவீது ராஜாவுக்காக ஆதரவாக அப்சலோமை எதிர்த்து போரிட்டான்; ஆனால் அவனைக் கொல்ல வேண்டாம் என தாவீது ராஜா தெளிவாகக் கட்டளையிட்டிருந்தான்; இருந்தாலும் அப்சலோம் கொல்லப்பட்டான். இந்த சோகமான இச்செய்தி தாவீதுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இது மிகவும் உணர்திறன் தேவைப்படும் பணி.

இரண்டு ஓட்டப்பந்தய வீரர்கள் தாவீதிடம் செய்தியை எடுத்துச் செல்ல முன் வந்தனர். இருப்பினும், யோவாப், அகிமாஸை அன்றைய செய்தியை கொண்டு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தி, அவன் மற்றொரு முறை செல்லலாம் என்று பரிந்துரைத்தார். அதற்குப் பதிலாக, யோவாப் ஒரு கூஷியைத் தேர்ந்தெடுத்து, தான் கண்டதைத் தாவீதிடம் தெரிவிக்கும்படி அனுப்பினான். ஆனால், அகிமாசும், அவனோடு சேர்ந்து ஓடப் பிடிவாதமாக இருந்தான். இறுதியில் யோவாப் அவனையும் ஓட விடுமாறு அனுமதித்தான். வேகமான ஓட்டப்பந்தய வீரராக இருந்ததால், அகிமாஸ் கூஷியை முந்திச் சென்று தாவீது அரசனை முதலில் அடைந்தார்.

மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருந்த தாவீது, போரின் முடிவைப் பற்றி ஆவலுடன் அகிமாசிடம் கேட்டார். அகிமாசிடம் வேகமும், முயற்சியும் இருந்த போதிலும், முழுவிவரம் தனக்குத் தெரியாது என்று ஒப்புக்கொண்டார்: ... **"நான் பார்த்த போது ஒரு பெரிய சந்தடியிருந்தது .... ஆனால் அது இன்னதென்று எனக்குத் தெரியாது" என்றான்.** (2 சாமுவேல் 18:29). மிகுந்த அர்ப்பணிப்புடனும், விடாமுயற்சியுடனும் அவர் அயராது ஓடியிருந்தாலும், தெரிவிப்பதற்கு அர்த்தமுள்ள செய்தி எதுவும் அவனிடம் இல்லை. மாறாக, கூஷி, மெதுவாக வந்தாலும், செய்தியை தெளிவுடனும் உணர்திறனுடனும் தெரிவித்தார். ... **"அந்தப் பிள்ளையாண்டானுக்கு நடந்தது போல, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களுக்கும், பொல்லாப்புச் செய்ய உமக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்கக்கடவது"** ... 2 சாமுவேல் 18:32 என்று தாவீதின் கேள்விக்கு கூஷி சரியான பதிலளித்தான்.



**அப்சலோமின் மரணத்தைப் பற்றி தாவீதிடம் சாமர்த்தியமாகத் தெரிவித்த கூஷி**

தான் சொல்லவேண்டிய செய்தியை நேரடியாகக் கூறாமல், அப்சலோமின் மரணத்தைப் பற்றி தாவீதிடம் கூஷி சாமர்த்தியமாகத் தெரிவித்தான்.

அகிமாஸ் மற்றும் கூஷி இடையேயான ஒப்பீடு வியக்க வைக்கிறது. அகிமாஸ் ஒரு சிறந்த ஓட்டப்பந்தய வீரராக இருந்தார். ஆனால் ஒரு மோசமான தூதுவராக இருந்தார். ஏனெனில் அவனிடம் செய்தி ஒன்றுமில்லை. ஒரு தூதுவரின் முதல் பொறுப்பு சரியான செய்தியைத் தெரிவிப்பதாகும்.

இந்த பத்தியை நாம் சிந்தித்துக் கற்றுக்கொள்ளவேண்டிய பாடத்தை கவனிப்போம். அகிமாசைப் போல் ஓடாதீர்கள்!

என் அன்பான சகோதர, சகோதரிகளே! இந்த ஆண்டு துவக்கத்திலிருக்கிற நாம் வேகத்துடனும், முயற்சியுடனும் ஓடாமல் நோக்கத்துடனும், தெளிவுடனும் ஒடுவோம். வெற்றி பெற ஓடுவோம்!

*******

# அவசரத் தேவை

**அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** அமோக வளர்ச்சியடைந்து வருவதால் ஊழிய தரிசனமும், பிரதிஷ்டையும், உண்மையும் உள்ள கீழ்க்காணும் பொறுப்புகளை ஏற்க ஆண், பெண் ஊழியர்கள் தேவை.

- ✳ **தலைமை சபைக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட முழுநேர உதவி ஊழியர்கள்**
- ✳ **சென்னையில் உள்ள கிளை சபைகளுக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட முழுநேரப் போதகர்கள்**
- ✳ **முழுநேர செக்யூரிட்டிப் பணியாளர்கள்**
- ✳ **DTP மற்றும் தட்டச்சு தெரிந்தவர்கள்**
- ✳ **ஆங்கிலம் மற்றும் இதர மொழிகளில் பேச அல்லது எழுத தேர்ச்சி பெற்றவர்கள்**
- ✳ **நிர்வாகத்தில் ஆர்வமுள்ள அலுவலக மேலாளர்கள்**
- ✳ **முழுநேர வேதாகமக் கல்லூரி விரிவுரையாளர்கள்**
- ✳ **ஊழிய வளர்ச்சிப் பணியாளர்கள்**
- ✳ **முழுநேர வாகன ஓட்டுநர்கள்**
- ✳ **மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள்**
- ✳ **அழைப்பின் எதிரொலி பத்திரிகை ஆசிரியர் குழுவில் செயல்பட தன்னார்வ உறுதுணையாளர்கள்** (Hon.Co-ordinators)
- ✳ **முழுநேர சமையல் பெண்கள்**
- ✳ **முழு நேர துப்புரவு பணியாளர்கள்**

**தகுதிக்கேற்ப மாத சம்பளம் வழங்கப்படும்**

**அழைப்பின் எதிரொலி** அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்
அல்லது வாட்ஸ்அப் எண் : **98412 71858**
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org மூலம் விண்ணப்பிக்கலாம்.

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி** (ECHO OF HIS CALL) **யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
**E.mail : sam@echoofhiscall.org**

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❄ வருட சந்தா ரூ. 100/–  ❄ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th JANUARY 2025**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**